தினகரன்

2024

உள்ளார். அமமுக, பிஜேபி களுக்கிடையே தான் இந்த யின் பொதுச்செயலாளர்

### அழகப்பா பல்கலையில்

# அறிவியல் கண்டுபிடிப்புகளை பார்வையிட்ட மாணவர்கள்



காரைக்குடி அழகப்பா அறிவியல் துறை சார்பில் நடந்த நிகழ்ச்சியில் மாணவர்களை துணைவேந்தர் ஜி.ரவி பாராட்டினார்.

**காரைக்குடி, மார்ச்2:** காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக அறிவியல் துறையின் சார்பில் தேசிய அறிவியல் தினத்தை முன்னிட்டு பார்வையாளர்கள் தினம் கொண்டாடப்பட்டது. பதிவாளர் செந்தில்ராஜன் வரவேற்றார். துணைவேந்தர் ஜி.ரவி தலைமை வகித்து பேசுகையில், அறிவியல் தொடர்பான புதிய சிந்தனைகள் மாணவர்களிடம் உருவாக வேண்டும். இப்பல்கலை கழக அறிவியல் வளாகம் போல் தமிழ்நாட்டில் வேறு எந்த பல்கலைக்கழகத்திலும் இல்லை. அறிவியல் வளாகத்தில் பல்வேறு அதிநவீன கருவிகள் உள்ளன. இளைய பல்கலைக் கழகமான அழகப்பா பல்கலைக் கழகம் தொடர்ந்து பல்வேறு விருதுகளை பெற்று முன்னிலையில் உள்ளது.

எதிர்கால அறிவியல் விஞ்ஞானிகளான நீங்கள் புதியவற்றை தெரிந்து கொள்ள ஆர்வம் காட்ட வேண்டும். தைரியமாக எதையும் எதிர்கொள்ள வேண்டும். கேள்வி கேட்க வேண்டும். கேள்வி கேட்டால் தான் சிந்தனை வளரும். இப்பல்கலைக் கழக உயிரி தொழில் நுட்பவியல் ஆராய்ச்சி மாணவி கவுரிபிரியா, மாணவர்கள் ராகுல், மனிஷா, நந்தினி ஆகியோர் புதிதாக கண்டுபிடித்துஸ்டாட்அப் நிறுவனம் துவங்க பதிவு செய்துள்ளது பாராடக்கூடியது என்றார்.

முதன்மையர் பேராசிரியர் ஜெ.ஜெயகாந்தன் பேசுகையில், இந்தியா உள்நாட்டு தொழில் நுட்பங்களில் குறிப்பிடத்தக்க சாதனைகளை படைத்துள்ளது. உலக அளவில் புதிய கண்டுபிடிப்புகளில் இந்தியா 40வது இடத்தில் உள்ளது. புதுப்பிக்கதக்க எரிசக்தியை பயன்படுத்துவதில் 4வது இடத்திலும், 5ஜி இணையதள சேவையில் முதல் மூன்று நாடுகளுக்குள் உள்ளது என்றார்.

ஆட்சிமன்ற குழு உறுப்பினர் பேராசிரியர் சேகர், உயிரிதொழில் நுட்பவியல் துறை தலைவர் முனைவர் பாலமுருகன், பேராசிரியர் சிவக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர். இணை பேராசிரியர் வில்சன் நன்றி கூறினார். பார்வையாளர் தினத்தை முன்னிட்டு கண்டு பிடிப்புகள் மற்றும் கருவிகளை 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பள்ளி, கல்லூரி மாணவர்கள் பார்வையிட்டனர்.



காரைக்குடி அழகப்பா பல்கலை., அறிவியல் வளாகத்தில் நடந்த பார்வையாளர் தின கண்காட்சியை பார்வையிட்ட மாணவர்கள்.

# அழகப்பா பல்கலை.,யில் பார்வையாளர் தினம்

**காரைக்குடி, பிப்.29–** காரைக்குடி அழகப்பா பல்கலை., அறிவியல் வளாகத்தில் நடந்த பார்வையாளர்தினநிகழ்ச்சியில் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பார்வையிட்டனர்.

காரைக்குடி அழகப்பா பல்கலை., அறிவியல் புலத்தின் சார்பில் தேசிய அறிவியல் தினம் பார்வையாளர்கள் தினமாக கொண்டாடப்பட்டது.

அறிவியல் புல முதன்மை ஜெயகாந்தன் வரவேற்றார். அழகப்பா பல்கலை., துணை வேந்தர் க. ரவி தலைமையேற்றார். அழகப்பா பல்கலை., ஆட்சி மன்ற குழு உறுப்பினர் சேகர் வாழ்த்தினார். பல்வேறு துறைகளைச் சார்ந்த பேராசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொண்டனர்.

கண்காட்சியில் அகழ்வாராய்ச்சியில் கண்டெடுக்கப்பட்ட தொல்லியல் பொருட்கள், அறிவியல் சோதனைக் கூடத்தில் அதிநவீன உபகரணங்களின் கண்காட்சி மற்றும் அதன் செயல்பாடு குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. அறிவியல் துறை மட்டுமின்றி நுண்கலைத் துறை, திறன் மேம்பாட்டு மையம் சிறப்பு கல்வி மற்றும் புணர்வாழ்வு அறிவியல் துறையினரும் ஆராய்ச்சிகளைக் காட்சிப் படுத்தியிருந்தனர்.

பேராசிரியர் வில்சன் நன்றி கூறினார்.